## கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபை
## அநுராதபுர மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 30 ஆந்திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந்திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 09 ஆந்திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கிழக்கு நுவரகம் பலாத பிரதேச சபைபிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நீதிமன்ற தண்டப்பண வருமானம் மொத்தம் ரூபா 6,767,920 ஆக இருந்த போதிலும், அது ரூபா 7,006,418 எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் ரூபா 238,498 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய வருமானம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மீளாய்வாண்டின் திசம்பர் மாதத்திற்கு உரிய நீதிமன்ற தண்டப்படண வருமானம் தொடர்பாக மாகாண இறைவரி திணைக்களத்தின் மூலம் அனுப்பப்பட்ட அட்டவணை 2019.04.10 ஆந் திகதி கிடைத்தமை யினால் அட்டவணை வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் அத்தொகை குறிப்பாக இனங்காணப்பட வில்லை. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு 19 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 1,448,083 எனினும், அத்தினத்தில் கணக்குகளுடன் சமர்ப்பிக் கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம், அதன் பெறுமதி ரூபா 1,449,221 என எடுக்கப்பட்டிருந்தால் ரூபா 176,740 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | உரிய மீதிகளில் வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு செய்யப்பட்டு சீராக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். சரியான மீதி உள்ளடக்கப்பட்டு கணக்கை சரியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஈ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 13 செயற்றிட்டங்களுக்கு உரிய கிடைக்க வேண்டிய தொகை ரூபா 1,701,406 ஆகும். | கிடைக்க வேண்டிய நிலுவை அறவிடப்பட வேண்டும். | இங்கு குறிப்பிடப்பட்ட 13 செயற்றிட்டங்களில் 02 இற்குரிய ரூபா 297,585 2019 ஆம் ஆண்டினுள் கிடைத்துள்ளதுடன் அதற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏனைய செயற்றிட்டங்களின் தகவல்கள் ஆராயப்பட்டு எதிர்வரும் ஆண்டுகளில் இணங்கஞ் செய்யப்படும். |
| (ii) | 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்படும் நிர்மாணக் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 2,493,331 ஆகும். | கிடைக்க வேண்டிய நிலுவை அறவிடப்பட வேண்டும். | ரூபா 393,316 2019 ஆம் ஆண்டினுள் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் செயற் திட்டம் மேற்கொள்ளப்பட்டி ருந்ததுடன் செலுத்த வேண்டிய தொகை அச்செயற்திட்டங் களுக்கான நிறுத்தி வைத்தல் ஆகும். செயற்றிட்டங்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக நிறுத்தி வைத்தல் தொகை மீளச் செலுத்துவதற்கு விதந்துரைக்கப்படாத எஞ்சிய செயற்றிட்டங்கள் 2017 ஆம் ஆண்டிற்குரியவை ஆகும். |

| | | |
|---|---|---|
| | | இப்பெறுமதி வைப்பு பேரேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. |

**(ஈ) கணக்காய்விற்கு சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 147,113,677 ஆகவுள்ள 04 கணக்கீட்டு விடயங்களுக்குரிய உரித்தை உறுதிப்படுத்தும் கடிதங்கள், சொத்து ஆவணங்கள், வயதுப் பகுப்பாய்வு, மீதியை உறுதிப்படுத்தும் கடிதம் மற்றும் விபரமான உப ஏடுகள் என்பன சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் கணக்காய்வின் போது அதனை திருப்திகரமான விதத்தில் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான எழுத்துச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டுகளில் இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்படும் ரூபா 63,500 பெறுமதியான வைப்பு தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | நிதிப் பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏனைய வைப்பாளர்களிடம் வினவி, வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2016 திசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 12 வாகனங்களிற்கு எரிபொருள் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும் | எரிபொருள் பரிசீலனை எதிர்வரும் மாதங்களில் மேற்கொள்ளப்படும். |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான தனித்தனி பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | கணனி உதிரிப்பாகங்கள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணுவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| திறைசேரிச் சுற்றறிக்கை | | எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,269,619 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,790,265 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,550,000 | 1,985,775 | 1,985,775 | - | 1,500,000 | 2,254,540 | 2,254,540 | - |
| (ii) | வாடகை | 426,700 | 387,000 | 316,315 | 70,685 | 387,000 | 387,000 | 305,315 | 81,685 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 100,000 | 296,236 | 296,236 | - | 175,000 | 314,936 | 314,936 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,600,000 | 3,600,000 | 3,000,000 | 600,000 | 3,600,000 | 3,600,000 | 3,300,000 | 300,000 |
| | மொத்தம் | 5,676,700 | 6,269,011 | 5,598,326 | 670,685 | 5,662,000 | 6,556,476 | 6,174,791 | 381,685 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றமடைந்த பிரதேசங்களாக வெளியிடப்பட்டு வீதவரி விதிதப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னேற்றமடைந்த பிரதேசங்களாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 6 கிராம சேவகர் பிரிவுகளில் வரி அறவிடு வதற்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், முன்னேற்றமடைந்த பிரதேசங்களைக் குறிப்பிடு வதற்கான ஆலோசனை சபை அங்கீகாரத்தைப் |

| | | |
|---|---|---|
| | | பெற்றுள்ளதுடன், அதற்கமைய வீதவரி அறவிடப்படும் பிரதேசம் வரைபடமாக்கப் பட்டுள்ளது. |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 6,410,316 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 38,823,037 ஆகும். | உரிய உறுதிப்படுத்தல் அறிக்கையை உடனடியாகப் பெற்று நிலுவை பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் உருவாகும் கழிவுப் பொருள்கள் கீரிக்குளம் குப்பை மீள்சுழற்சி நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. பிரதேச மக்கள் இந்நிலையத்திற்குக் காட்டும் எதிர்பு காரமாக தற்போது இவ்விடத்திற்கு கழிவுகளை அனுப்ப முடியவில்லை. பிரதேச சபையினால் தனியார் இடமொன்றில் தனது அதிகாரத்திற்கு உட்பட்ட உருவாகும் கழிவுகள் அகற்றப்படுவதாக அறியப்பட்டது. | உரிய முறையில் கழிவுகளை அகற்றுதல், திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையமொன்றை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது தனியார் இடமொன்றில் குப்பை அகற்றப்படுவதுடன், கழிவுப்பொருட்களை அகற்றுவதற்கு இட மொன்று வழங்குமாறு வன அபிவிருத்தி திணைக்களத்திடம் கேட்கப்பட்டுள்ளது. |

(ஆ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் "நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030" தொடர்பாக சபை அறிந்திராமல் இருந்ததுடன் மீளாய்வாண்டில் அது தொடர்பாக திட்டவட்டமான செயற்பாடுகள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) சபையினால் பேணப்படும் பொது வைப்புப் பதிவேடு நாளது வரையறுக்கப்படவில்லை. | வைப்புப் பதிவேடு நாளது வரையறுக்கப்பட வேண்டும். | கடந்த ஆண்டுகளில் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள இடங்களில் வைப்பாக உள்ள மீதிகளை ஆராய்ந்து வருமானத்தில் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) சபையினால் சேகரிக்கப்படும் முத்திரை கட்டணம் உரிய காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பாத காரணத்தினால் மீளாய்வாண்டின இறுதியில் செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 1,723,331 வரை அதிகரித்திருந்தது. | உரிய முத்திரை கட்டணம் உடனடியாக உள்நாட்டு இறை வரித்திணைக்களத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் இருந்து காலாண்டு ரீதியாக முத்திரை கட்டணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டு களுக்குரிய முத்திரை கட்டணத்தை விடுவிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.3 மனிதவள முகாமைத்தும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 46 ஆயினும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் நிரந்தர பதவியணியினரில் 30 பேரும் தற்காலிக பதவியணியில் 16 பேரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | சபையின் உரிய வெற்றிடத்தை நிரப்புவதற்கும் சபையின் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடமாகவுள்ள பதவியணியினர்களை நிரப்புவதற்கு மாகாண அரச சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வெற்றிடங்களை நிரப்பப்படும் வரை கனிஷ்ட சேவைக்காக மட்டும் தற்காலிக பதவியணியினர் சேர்க்கப்பட்டுள்ளனர். |
| (ஆ) சபையின் 8 பதவிகளுக்குரிய வெற்றிடங்கள் 17 ஆகும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | வெற்றிடமாகவுள்ள பதவியணியினரை நிரப்புவதற்கு மாகாண அரச சேவைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) சபையில் இருந்து இடை விலகிய 17 ஊழியர்களிடமிருந்து ரூபா 88,605 கடன் மீதி நீண்டகாலமாக அறவிடப்படவில்லை. | நிலுவையாகவுள்ள ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டும். | நீண்டகாலமாக அறவிடப்படாது காணப்படும் ரூபா 88,605 கடன் மீதியை அறவிடு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 34,392,275 ஆகவுள்ள 325 ஏக்கருக்கும் மேற்பட்ட 163 காணித் துண்டுகள் சபையின் நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்த போதிலும் அவற்றின் உரித்தை சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் உரித்தை சபைக்கு கையேற்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் | சொத்துக்களின் உரித்தை சபைக்கு கையேற்க உரிய பிரதேச செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் இது வரை காணி கையளிக்கப்படவில்லை |

### 3.4.2 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 1,319,050 பெறுமதியான மகேந்திரா டீசல் கெப் மற்றும் ரூபா 541,000 பெறுமதியான கோதுமை மா பேக்கரி உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன. | உபகரணங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவற்றை பயன்படுத்த அல்லது அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இக்கெப் வண்டியை அகற்றுவதற்கு அனுமதியைப் பெற்றுக் கொள்ள அனுப்பப்பட்டுள்ளது. கோதுமை மா பேக்கரி உபகரணங்களையும் கைதவிர்ப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஜனவரி 28 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1)(1) ஆம் இலக்க நிதி அமைச்சின் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அமைக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |